# அரசியலமைப்பின் மீது நடத்தப்படும் மன்னிக்க முடியாத படுகொலைத் தாக்குதல்!

ஆ.இராசா கண்டன உரை... 5ஆம் பக்கத் தொடர்ச்சி

அவை தலைவர் அவர்களே, இந்த மசோதாவில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சட்டத்திருத்தங்கள் அனைத்தும் சிக்கலானவை. அவைகள் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். மசோதாவின் பிரிவு 3சி கூறுகிறது, இந்தச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்போ அல்லது அதற்குப் பின்னரோ வக்பு சொத்தாக அடையாளம் காணப்பட்ட அல்லது அறிவிக்கப்பட்ட எந்தவொரு அரசாங்க சொத்தும் வக்பு சொத்தாகக் கருதப்படாது" என்று. இந்த அவையில் எத்தனை வழக்கறிஞர்கள் உள்ளனர் என்பது எனக்குத்தெரியாது. அரசாங்க சொத்து எவ்வாறு வக்பு சொத்தாக அறிவிக்கப் பட்டிருக்க முடியும்? அதை யார்அடையாளம் காட்டுவார்கள்? யார்அறிவிப்பார்கள்? யார் விசாரிப்பார்கள்? எதுவும் தெளிவாக இல்லை; ஆனால் நீங்கள் அறிவிப்பீர்கள் இந்தச் சொத்தை அரசினுடையது என்று. அரசாங்கம் அடையாளம் காண்பிக்கும்! அதற்குமேல் அதை வக்பு சொத்தாகக் கருதப்படாது.

இது மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டுள்ள தன்னிச்சையான சிறப்பு அதிகாரம் ! நிச்சயமாக, அனைத்து அரசியலமைப்பு அமைப்புகளுக்கும் சில தன்னிச்சையான உரிமை (Discretionary power) உள்ளது. நீதியரசர் பதஞ்சலி 1960 களில் கூறினார்: ஆம், எங்களுக்கு நீதித்துறையில் சில தன்னிச்சையான உரிமை உள்ளது; ஆனால் அது ஒரு குகை மனிதனின் உரிமையாக (Caveman discretion) இருக்கக்கூடாது". இங்கே உங்கள் தன்னிச்சை உரிமை ஒரு குகை மனிதனின் உரிமை!. சட்டத்தை செம்மைப் படுத்துகிறோம் என்ற பெயரில், அரசாங்கம் வக்பு என்ற கருத்தை தோற்கடிக்க முயற்சி செய்கிறது, சட்டத்தின் பெயரில் முழு வக்பு சொத்துக்களையும் அரசாங்கம் இசுலாமியர்களிடமிருந்து பறிக்க நினைக்கிறது !.

**ஒரு ஆட்சியர் தனது வழக்கை தானே நீதிபதியாக இருந்து விசாரிக்க முடியுமா?**

இரண்டாவதாக, 'வக்பு சொத்துக்களின் கணக்கெடுப்பு மற்றும் ஆக்கிரமிப்பை அகற்றுதல்' பற்றிய பிரிவுகளில் நிறைய முரண்பாடுகள் உள்ளன. சொத்தின் கணக்கெடுப்பை உறுதிப்படுத்துவதும்; வக்பு சொத்தின் ஆக்கிரமிப்பு அகற்றுவதும் எதிர்மறையானது. அதை ஒன்றாக இணைக்க நீங்கள் விரும்புகிறீர்கள். தற்போதைய சட்டத்தில் பிரிவு 4 இல் வக்பு சொத்தை கணக்கெடுப்பதற்கான ஒரு ஏற்பாடு உள்ளது. அரசாங்கத்தைச் சாராத ஒரு தன்னுரிமை கொண்ட அளவை ஆணையர் (Independent Survey Commissioner) இச்சட்டத்தில் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளார். அவர் ஒரு அரசுக்கு கட்டுப்பட்ட அதிகாரி அல்ல. அரசாங்கத்திற்கும் வக்பு வாரியத்திற்கும் ஒரு தகராறு வரும்போது, அவர்களின் உரிமைகளை விசாரித்து ஒரு முடிவுக்கு வர உரிமையியல் நடைமுறைச் சட்டத்தை (Civil Procedure Code) பின்பற்றி நடக்கும் ஒரு சார்பற்ற அதிகாரி ஆவார். அவர் ஒரு உரிமையியல் நீதிமன்றமாகவே (Civil Court) செயல்பட வேண்டும்.

இப்போது, இந்த திருத்தத்தில் நில அளவை ஆணையருக்கு பதில் 'மாவட்டஆட்சியர்' (Collector) பணியமர்த்தப்பட்டுள்ளார். எனது கேள்வி இதுதான். வக்பு வாரியத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான எந்தவொரு தகராறிலும், ஒரு ஆட்சியர் எப்படி நீதிபதியாக இருக்கமுடியும் ? இயற்கை நீதியின் (Natural Justice) கொள்கை உங்களுக்குத் தெரியுமா? யாரும் தங்கள் சொந்த விஷயத்தில் தாங்களே நீதிபதியாக இருக்க முடியாது (No one can be a judge for his own cause). அதே ஆட்சியர் அமர்ந்து சொத்தின் உரிமையாளர் அரசாங்கமா அல்லது வக்பு வாரியமா என்பதை முடிவு செய்கிறார். இது சட்ட முறை (Jurisprudence) அறியாதது. எதிரானது. சட்டத்துறையினரும் ஏற்காத ஒன்று. ஒரு ஆட்சியர் தன் வழக்கை தானே நீதிபதியாக இருந்து எவ்வாறு விசாரிக்க முடியும்?

**இந்த மசோதா ஆக்கிரமிப்பை மீண்டும் ஆய்வு செய்ய விரும்புகிறது!**

அடுத்து, இந்த மசோதா ஆக்கிரமிப்பை மீண்டும் ஆய்வு செய்ய விரும்புகிறது. நில அளவை கணக்கெடுப்பு முடிந்து விட்டது; இப்போது அடுத்ததாக ஆக்கிரமிப்புக்கு வருகிறது. நீங்கள் இச்சட்ட முன்வடிவின் 'நோக்கங்கள் மற்றும் காரணங்கள்' (Reasons and Objects) அடிப்படையில் ஆக்கிரமிப்பை மீண்டும் ஆய்வு செய்ய விரும்புவதாக குறிப்பிட்டீர்கள். ஆனால், வக்பு சட்டம் பிரிவு 54 ஆக்கிரமிப்பை குறிப்பிடுகிறது. தயவு செய்து மசோதாவை பாருங்கள். ஒரு சிறிய மாற்றம் இப்பிரிவில் கொண்டு வரப்பட்டுள்ளதா? நீங்கள் பிரிவு 54 இல் ஒரு காற்புள்ளி, அரைப்புள்ளியைகூட மாற்றவில்லை. ஆனால் நீங்கள் 'நோக்கங்கள் மற்றும் காரணங்கள்' என்று சொல்லும்போது இந்த மசோதாவில் மீண்டும் ஆக்கிரமிப்புகள் குறித்து ஆய்வு செய்யப்படுகிறது என்று கூறுகிறீர்கள். அதற்கு முற்றிலும் மாறாக, எனது நண்பர் கூறியபடி, நீங்கள் நாட்டின் சிறுபான்மையினர்களுக்காக கடுமையான சட்டங்களை உருவாக்க விரும்புகிறீர்கள். ஆனால் உங்கள் கூற்றில் சிறிதும் உண்மை இல்லை.

**தீர்ப்பாயங்களைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்!**

ஏனெனில், தற்போதைய சட்டத்தின்படி வக்பு சொத்துகளுக்கு எதிராக குற்றமிழைத்தால் 'கடுமையான சிறை மற்றும் அபராதத்தை' (Rigorous imprisonment and penalty) விதிக்கவல்லது. நீங்கள் இதனை 'எளிமையான சிறைதண்டனை' (Simple imprisonment) என்று மாற்றியுள்ளீர்கள். தற்போது இந்தச் சட்டத்தில் செய்யப்பட்ட குற்றம் உடனடியாக புலன் விசாரணை நடவடிக்கை எடுக்கத்தக்க மற்றும் பிணையில் வெளிவர முடியாததாக (Cognizable and non bailable) இருக்கின்றது . நீங்கள் அதை பிணை வழங்கும் வகையில் (Bailable) மாற்றி அப்பிரிவை நீர்த்துப் போகச் செய்துள்ளீர்கள்!

நான் தீர்ப்பாயங்களை (Tribunal) பற்றி குறிப்பிட விரும்புகிறேன். ஒரு வழக்கறிஞராக, நான் மீண்டும் கூறுகிறேன்; நீதிமன்றங்களை உரிமையியல், உயர் மற்றும் உச்ச நீதிமன்றம் என பிரித்துள்ளோம். நீதிமன்றங்களின் நீண்ட தாமதப்படுத்தும் விசாரணை வழக்கங்களை தவிர்க்கவே நாம் தீர்ப்பாயங்களை உருவாக்கி யிருக்கிறோம். நாம் பல தீர்ப்பாயங்களை கொண்டுள்ளோம். தொலைத் தொடர்பு தீர்ப்பாயம் உள்ளது. வருமான வரி தீர்ப்பாயம் உள்ளது. காரணம் என்ன? உரிமையியல் நீதிமன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள், கீழ் நிலை நீதிமன்றங்கள் மற்றும் உயர் நீதிமன்றங்கள் ஆகியவற்றில் பல வழக்குகள் குவிந்து கிடக்கின்றன. இந்த தனித்த சிறப்பான துறைகளின் வழக்குகளை தீர்க்கவும், கால நீட்டிப்பு சவால்களை தீர்க்கவும் குறிப்பிட்ட தீர்ப்பாயங்களை நிறுவப்பட வேண்டியுள்ளது. அதன் அடிப்படையில்தான், அரசியலமைப்பு சட்டம் தீர்ப்பாயங்களை உருவாக்க அனுமதிக்கின்றது.

இச்சட்டத்தில் ஏற்கனவே, ஒரு தீர்ப்பாயத்தை உருவாக்கி, அதன் தீர்ப்புதான் இறுதி (Tribunal decision is final) என்று தெளிவாக சட்டத்தில் உள்ளது. ஏன் அது இறுதியாக இருக்க வேண்டும்? ஏற்கனவே நில அளவை ஆணையர், உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகாரங்களை பெற்றுள்ளார். அவர் தனிப்பட்ட நபர் அல்ல. அவர் சட்டத்தின் கீழ் ஒரு நீதி நிறுவனம். அவர் உரிமையியல் சட்ட விதிகளின்படி (CPC) மற்றும் பழைய இந்திய சாட்சிய சட்டப்படியும் அவைகளை பின்பற்றி தீர்ப்பளிக்கிறார்; எனவே, நில அளவையரே முதல் முதல் நீதிமன்றம். இரண்டாவது, மேல் முறையீடு செய்ய இந்த தீர்ப்பாயங்கள் உள்ளன. மூன்றாவது, சீராய்வு சட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. அது உயர் நீதிமன்றங்களுக்கு செல்ல முடியும். இதில் உங்களுக்கு என்ன பிரச்சனை?

(குறுக்கீடுகள்)

ஆனால் நீங்கள் தீர்ப்பாயம் சொல்வது இறுதி அல்ல என்கிறீர்கள் என்றால் என்ன வகையான சட்டவியல் நடைமுறைகளை (Jurisprudence) நீங்கள் பின்பற்றுகிறீர்கள்? இப்போது, வக்பு அமைப்புகளை பதிவு செய்வதில் உள்ள பிரச்சினையை பிரிவு 36(1) இல் காணலாம். முன்னர், வக்பு சொத்துக்கள், உரிய விசாரணைக்குப் பிறகு, 36(1) பிரிவின்படி வக்பு சொத்தாக அறிவிக்கப்படலாம். அந்த செயல்முறை என்ன என்பதை தெளிவாக இச்சட்டத்தில் ஏற்கனவே உள்ளது. இப்போது, நீங்கள் அதில் உட்பிரிவு7ஏ பிரிவைகொண்டுவர விரும்புகிறீர்கள். 7ஏ பிரிவுஎன்னகூறுகிறது? இதுஒருதனித்துவமான பிரிவு, இது அனைத்து வக்பு சொத்துக்களையும் அழிப்பதாக இருக்கும். தயவு செய்து எனக்கு 7ஏ பிரிவை வாசிக்க அனுமதி அளியுங்கள்.

வக்பு சொத்தின் மீது இருக்கும் பிரச்சனையை ஒருதகுதிவாய்ந்தநீதிமன்றத்தால்தீர்க்கப்படும்வரை, அந்த சொத்தை வக்பு வாரிய சொத்தாக பதிவு செய்யக் கூடாது என மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. வக்பு சொத்தாக ஒரு சொத்தை பதிவு செய்யும் முறையில், எந்தவொரு பிரச்சினையும் மாவட்ட ஆட்சியருக்கு தெரிய வந்தால், அதில் இறுதி முடிவு எடுக்கப்படாது. அது நீதிமன்றத்தில் தீர்மானிக்கப்படும், அதுவரை, அது அரசின் சொத்தாகவே இருக்கும். பின்பு, 10ஆம் உப பிரிவு கூறுகிறது, இந்த மாவட்ட ஆட்சியரின் உத்தரவின்பேரில் வழக்கோ, மேல் முறையீடோ செய்ய முடியாது என்று !. இதன் பொருள் என்ன ? வக்பு சொத்தில் பிரச்சினை இருந்தால் வழக்கு உச்ச நீதிமன்றம் வரையில் செல்லும். தீர்ப்பிற்கு 30 ஆண்டுகள் ஆகும். அதுவரையில் அந்த சொத்து அரசின் சொத்தாகக் கருதப்படும். இதன் பொருள் என்ன? வக்பு வாரிய சொத்துக்களை அரசு எடுத்துக் கொள்ளப்போகிறது. அதேபோல் பதிவு செய்யும் முறையும் உள்ளபடியே மிகவும் கடினமாக இருக்கின்றது.

**எங்களுக்குப் பாடம் கற்பிக்காதீர்கள்!**

வக்பு வாரியங்களின் அமைப்பை (Boards) பொருத்தவரை இஸ்லாமியர் அல்லாதவர்களை எதற்காக உள்ளே உறுப்பினராக கொண்டு வந்துள்ளீர்கள்? தமிழ்நாடு உள்படஅனைத்து மாநிலங்களிலும், இந்து அறநிலையத் துறை உள்ளது. தமிழ்நாட்டில் என்ன நடந்தது? ஒரு கோவிலில், அறநிலையத்துறையின் உள்ள பல ஏக்கர் நிலம் மூலம் வந்த வருமானத்திலிருந்து, அறநிலையத்துறை ஒரு கலைக் கல்லூரி நடத்த முடிவு செய்தது. பேராசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டபோது ஒரு இஸ்லாமியர் தகுதி அடிப்படையில் வேலைக்கு தேர்வு செய்யப்பட்டார். உடனடியாக ஆர்.எஸ்.எஸ் மற்றும் இந்து முன்னனி அமைப்பு ஒரு அறிக்கை வெளியிட்டது: இது இந்துக்கள் சொத்து. நீங்கள் ஏன் ஒரு இஸ்லாமிய பேராசிரியரை அமர்த்துகிறீர்கள் ?" என்று!. இப்போது, சொத்தும் மதமும் வேறு வேறு என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். அதேபோல் மதமும் அரசியலும் வேறு வேறு ; இரண்டையும் கலக்காதீர்கள் என்று நாங்கள் சொல்கிறோம். தயவு செய்து எங்களுக்கு பாடம் கற்பிக்காதீர்கள். இந்த நாட்டை மதசார்பற்ற ஒருமைப்பாடு கொண்டதாக பேணிட அரசியலை மதத்திலிருந்து பிரித்து விடுங்கள்.

இப்போது, மசோதாவின் 40ஆம் பிரிவு மிகவும் முக்கியமானது. இந்திய அறக்கட்டளைகள் சட்டம் (Trust Act) அல்லது சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் (Societies Registration Act) கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு சொத்து அது வக்பு சொத்தாக இருப்பதாக தெரிய நேரிட்டால், வாரியம் அந்த சொத்து தொடர்பான விசாரணையை மேற்கொண்டு , அது வக்பு சொத்து என முடிவு செய்யலாம். இந்த விதியை நீக்குவதன் காரணம் என்ன ? நாடாளுமன்ற கூட்டுக்குழுவில் இது குறித்து ஒருபோதும் விவாதிக்கப்படாதபோது நீக்குவதற்கான அதிகாரத்தை யார் அளித்தார்கள் ?

இறுதியாக, பிரிவு 108(ஏ) வக்பு வாரிய சட்டத்திற்கான சிறப்பு மற்றும் கட்டுப்படுத்த முடியாத (Over riding powers) அதிகாரம் குறித்து பேசுகிறது. பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்புச் சட்டம்) அல்லது வரதட்சணை தடைச் சட்டம் ஆகியவற்றை எடுத்துக் கொள்ளுங்கள், இவைகளைப் போல் சிறப்புச் சட்டங்கள் (Special Legislation) இயற்றப்படுவது குறிப்பிட்ட உரிமைகள் மறுதலிக்கவல்ல பிரிவுகளை பாதுகாக்க இதுபோன்ற சட்டங்களை சட்டமன்றம் அல்லது நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்டால், மற்ற சட்டங்கள் அவற்றை கட்டுப்படுத்த கூடாது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் நலன்களைப் பாதுகாக்க இப்படிப்பட்ட சிறப்பு அதிகாரம் இருக்க வேண்டும். ஆனால், நீங்கள்அதை நீக்குகிறீர்கள்.

**அன்றே பிரதமர் நேரு எச்சரித்தார்!**

நிறைவாக, உங்களுக்கு கவனப்படுத்துகிறேன். சுதந்திரத்திற்குப் பிறகு, அப்போதைய இந்தியாவின் பிரதமர்அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் கடிதம் எழுதினார். அப்போதைய பிரதமர் முதலமைச்சர்களுக்கு எழுதிய கடிதத்தின் அதிகாரப்பூர்வ பதிவிலிருந்து நான் மேற்கோள் காட்டுகிறேன்:

தனியார் இராணுவத்தின் இயல்பில் இருக்கும் ஒரு அமைப்பு, நிச்சயமாக கடுமையான நாஜிவழிகளைப் பின்பற்றுகிறது, நாஜி அமைப்பின் நுட்பத்தைப் பின்பற்றுகிறது என்பதற்கு எங்களிடம் ஏராளமான சான்றுகள் உள்ளன. நாஜிகட்சி ஜெர்மனியை அழிவுக்கு இட்டுச் சென்றது. இந்தப் போக்குகள் இந்தியாவில் பரவி அதிகரிக்க அனுமதிக்கப்பட்டால், அவை இந்தியாவுக்கு மிகப்பெரிய சேதத்தை ஏற்படுத்தும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. என்றாலும் இந்தியா உயிர்ப்போடு நிற்கும்! என அய்யமின்றி நம்பலாம். ஆனால் இந்தியா மோசமான காயங்களை அடைந்திருக்கும்; மீள்வதற்கு நீண்ட காலம் எடுக்கும்." என எச்சரித்தார் தேசத்தின் பிரதமர் 1948 ல் !

யார் அந்த பிரதமர் ? அது பண்டிட் ஜவஹர்லால் நேரு!.

எந்த அமைப்பை பற்றி சொன்னார் ? ஆர்.எஸ்.எஸ்!

இந்தஅரசாங்கத்தை நான் எச்சரிக்கிறேன், ஆர். எஸ்.எஸ்ஸுடன் இணைந்து பயணிக்காதீர்கள்; தேசத்திற்கு நல்லதல்ல. நன்றி.

இவ்வாறு ஆ.இராசா அவர்கள் உரையாற்றினார்.

## ஆர்.எஸ்.எஸ்ஸுடன் இணைந்து பயணிக்காதீர்கள்; தேசத்திற்கு நல்லதல்ல!

# பேரிடர் அபாயக் குறைப்பு நடவடிக்கைகளை செம்மைப்படுத்த "கருத்தியல் தளம்" அமைக்கப்படும்!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பதிலுரை!

4 ஆம் பக்கத் தொடர்ச்சி

**பேரிடர் மேலாண்மை!**

பேரிடர் மேலாண்மை: கடந்த வருடமும், இந்த வருடமும் நல்ல மழை பெய்தது; பருவம் தவறிய மழை பெய்தது. தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் நல்ல மழை பெய்தது. நம்முடைய மீன்வளத் துறை அமைச்சர் அவர்களால் மாடியிலிருந்து கீழே இறங்கிவர முடியவில்லை. அவரைக் காப்பாற்றுவது பெரும்பாடாகிவிட்டது. அப்படிப்பட்ட மழை பெய்தது;

நீந்த முடியவில்லை. நான்கு நாட்கள் மேலே மாடியிலேதான் இருந்தார். ஆகவே, சிரமங்கள் இருந்தன. எல்லா ஆட்சிக் காலங்களிலும் புயல் வந்திருக்கும்; வெள்ளம் வந்திருக்கும். ஆனால், நம்முடைய இந்த நான்கு ஆண்டுகால ஆட்சியில், ஒவ்வொரு வருடமும் புயல் வந்திருக்கிறது; பருவம் தவறிய மழையும் வந்திருக்கிறது. இவற்றையெல்லாமல் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய சாமர்த்தியத்தால் சரி செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு புயல் வருகிறது என்று வானியல் மையம் அறிவித்தால் போதும்; முதல்வர் அவர்கள் நேரடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழை த்து, எந்தெந்த இடங்களில் புயல் வீசப்போகிறது, மழை வரப் போகிறது என்பதைக் கேட்டு, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் அவரே நேரடியாகப் பேசிவிடுவார்; எங்களை பேசச் சொல்வதில்லை. அவரே நேரடியாக காணொலிக் காட்சி வாயிலாகப் பேசி, வேண்டிய பணிகளைச் செய்ய வேண்டும் என்று கூறியதன் விளைவாகத்தான் மிகப்பெரிய சேதங்கள் தவிர்க்கப்பட்டன. அதற்கான நிதியையும் நாம் உடனே அளித்திருக்கிறோம்; மத்திய அரசாங்கம் நிதியைக் கொடுக்கவில்லை. நிதியை மத்திய அரசாங்கம் கொடுக்கவில்லை; நாம்தான் கொடுத்தோம்.

இவ்வாறு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக பணிகளை எதற்காக மேற்கொள்கிறாரென்றால், மக்கள்மீது இருக்கிற நல்ல எண்ணத்தால்தான். மக்கள் நம்மை நம்பிக் கொண்டிருக்கிறார்கள் என்ற எண்ணத்தோடு நிதியைக் கொடுத்தார்கள். கடந்த நான்காண்டு காலத்தில் மொத்தம் 15,272 கோடி ரூபாயை நிவாரணமாக மட்டும் கொடுத்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள், கடந்த நான்கு வருடங்களில் 15,272 கோடி ரூபாயை பொதுமக்களுக்கு நிவாரணமாக வழங்கியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தை எதிர்பார்க்கவில்லை. மத்திய அரசாங்கம் நிதியை கொடுக்குமா, கொடுக்காதா என்பது நமக்குத் தெரியும். நாம் எல்லோரும் நிதியைக் கேட்போம். அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலும் நிதியைக் கேட்டிருக்கிறார்கள். அதற்கான பட்டியலைப் பார்த்தால் பயந்துவிடுவோம். (குறுக்கீடு) இதோ முடித்துவிடுகிறேன். அ.தி.மு.க. -வின் பத்து வருட ஆட்சிக் காலத்தில் 1 கோடியே 46 இலட்சம் ரூபாயை மத்திய அரசிடம் கேட்டிருக்கிறார்கள்; ஆனால், 6,687 கோடி ரூபாய்தான் கொடுத்திருக்கிறார்கள். தி.மு.க. ஆட்சியின் கடந்த நான்கு வருட ஆட்சிக் காலத்தில் 50 ஆயிரத்து 812 கோடி ரூபாய் கேட்கப்பட்டது; வெறும் 629 கோடி ரூபாய்தான் நமக்குக் கொடுத்தார்கள். அனைத்து அரசாங்கங்களும் கேட்ட, பெற்ற தொகைக்கான பட்டியல் உள்ளது. 2011 ஆம் ஆண்டு தானே புயல் வந்ததிலி ருந்து அவர்களும் தொடர்ந்து நிதியை கேட்டிக்கொண்டிருந்தார்கள்; நாமும் தொடர்ந்து நிதியை கேட்டுக்கொண்டிருக்கிறோம். மத்திய அரசாங்கம் அந்தக் கோரிக்கையை வாங்கி பத்திரமாக வைத்துக்கொள்கிறது. (குறுக்கீடு) அவர்கள், அதை பத்திரமாக வைத்திருக்கிறார்கள்.

உறுப்பினர், உங்களை நாங்கள் குறையாகச் சொல்லவில்லை. நீங்கள் கேட்டபோதும் நிதியைக் குறைவாகத்தான் கொடுத்தார்கள்; நாங்கள் கேட்கும்போதும் நிதி யைக் குறைவாகத்தான் கொடுக்கிறார்கள். நம்மிடம் வாங்கி கணக்கு வைத்துக் கொள்கிறார்களே தவிர, நமக்கு நிதியைக் கொடுக்கவில்லை என்றுதான் சொல்கிறேன்.

இரண்டு பேரும் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறோம். இரண்டு பேருக்கும் கொடுக்கவில்லை. பொதுவாக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மற்ற முதலமைச்சர்களிடமிருந்து வித்தியாசமானவர். எதையும் முன்கூட்டியே யோசித்து செய்யக் கூடியவர். எதையும் வீட்டில் உட்கார்ந்து செய்யக்கூடிய முதலமைச்சர் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த பெஞ்சல் புயல் வந்த நேரத்திலும் சரி, தூத்துக்குடி, திருநெல்வேலி சென்றாலும் சரி, விழுப்புரம் area-வுக்கு சென்றாலும் சரி, கடலூருக்குச் சென்றாலும் சரி, அவர் நேராகப் பார்த்து ஆய்வு செய்த பிறகுதான் ஒத்துக்கொள்கிறார். நாங்கள் சொன்னால் ஒத்துக்கொள்வதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அவரை சமாதானப்படுத்துகிறோம் என்று நினைப்பார்கள். அவர் நேரடியாகப் பார்த்து, right அப்படி என்ற பிறகுதான் ஒத்துக்கொள்கிறார். அப்படிப்பட்ட ஒரு நல்ல மிகச் சிறந்த ஒரு முதலமைச்சர் நமக்கு கிடைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் காலத்தில் தமிழ்நாடு மேலும், மேலும் வளர்ச்சி அடையும். அதற்கு நாம் அத்தனை பேரும் உதவியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திராவிட மாடல் அரசு என்ன செய்தது, என்ன செய்தது என்று கேட்கிறார்கள். 2021 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரை, இந்த அரசாங்கம் செய்த சாதனைகள்; வருவாய்த் துறை செய்த சாதனைகள். 13,82,000 பேருக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் கொடுத்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) 1,11,00,000 பட்டா மாறுதல் செய்து கொடுத்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) 3,78,00,000 சான்றிதழ்களை நாங்கள் வழங்கியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) 9,46,000 பேருக்கு புதிய OAP-கள் நாங்கள் வழங்கியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) OAP தொகையை ஆயிரம் ரூபாயிலிருந்து 1,200 ஆக உயர்த்தி வழங்கியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், 6,000 கோடி ரூபாய் மதிப்புள்ள 38,840 ஏக்கர் நிலம் மீட்டெடுக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மூன்று விதமாக பிரித்துக்கொள்ளுங்கள். கிராம நத்தம் என்பது நம்முடைய கிராமங்களில் குடியிருப்பதை குறிக்கிறது. கிராம நத்தம் ஆவணங்கள் முழுவதுமாக கணினிமயமாக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 15,222 கோடி ரூபாய் நிவாரணத் தொகையாக நாங்கள் வழங்கியிருக்கிறோம். இதைவிட ஓர் அரசாங்கம் என்ன செய்ய முடியும்? செய்கின்ற காரியத்தை திறம்பட, நிதானமாக, அவசரமில்லாமல், அரசியல் கட்சி வேறுபாடில்லாமல், எல்லோருக்கும் செய்யக்கூடிய முதலமைச்ச ராக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, முதலமைச்சர் அவர்களோடு இருந்து பணியாற்றி அரசியல் பார்க்காமல் இந்த தமிழ்நாடு முன்னேறுவதற்குண்டான பணிகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) இந்த நிதிநிலை அறிக்கை. . .

உறுப்பினர் சதாசிவம் அவர்கள் சொன்னதையெல்லாம் குறித்துக்கொண்டோம். எது எங்களால் முடிகிறதோ, அதனை நாங்கள் செய்து கொடுத்துவிடுகிறோம். நிதியமைச்சர் அவர்களை கேட்டுக் கொண்டேயிருக்கிறோம். அவர் முதலமைச்சரிடம் எடுத்துக்கூறி உரிய நடவடிக்கை எடுப்பார். எல்லா காரியங்களையும் செய்கிறோம். நிதிநிலைக்கேற்றாற்போல், எதை எதை செய்ய முடியுமோ, அதனை செய்து கொடுக்கிறோம். (குறுக்கீடு) அண்ணாச்சி பார்த்துக் கொண்டேயிருக்கிறார். அவருக்குத் தெரியும். கட்டாயம் செய்வதற்காகத்தான் இருக்கிறோம். அந்தக் கட்சி, இந்தக் கட்சி என்றெல்லாம் பார்ப்பதில்லை. எல்லோருக்கும் எல்லாமும் நடக்க வேண்டும். தமிழ்நாடு மொத்தமாக நன்றாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் எல்லோருக்கும் இருக்கிறது. உங்களுக்கு எப்படியிருக்கிறதோ, நீங்கள் கட்சி மாறுபாடு இல்லாமல் எப்படி இருக்கிறீர்களோ, அதேபோன்றுதான் கட்சி மாறுபாடு இல்லாமல் நாங்களும் இருக்கிறோம். இந்த மானியக் கோரிக்கை தயார் செய்ய உதவியாக இருந்த அரசு தலைமைச் செயலாளர் முருகானந்தம், அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களின் செயலாளர்கள் டாக்டர் பி.உமாநாத் அவர்களுக்கும், டாக்டர் எம்.எஸ்.சண்முகம் அவர்களுக்கும், திருமதி அனுஜார்ஜ் அவர்களுக்கும், லட்சுமிபதி அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களின் முதன்மை தனிச் செயலாளர் சகோதரர் தினேஷ்குமார் அவர்கள், வருவாய் நிருவாக ஆணையாளர் டாக்டர் எம்.சாய்குமார் அவர்கள், வருவாய்த் துறையின் செயலாளர் திருமதி அமுதா அவர்கள், நிதித் துறையின் முதன்மைச் செயலாளர் உதயசந்திரன் அவர்கள், நில நிர்வாக ஆணையாளர் டாக்டர் கே.எஸ்.பழனிசாமி அவர்கள், நில சீர்த்திருத்த ஆணையாளர் ஹரிஹரன் அவர்கள்,

பேரிடர் மேலாண்மை இயக்குநர் திருமதி சிஜி தாமஸ் வைத்யன் அவர்கள், வருவாய் துறையின் சிறப்புச் செயலாளர் மரியாதைக்குரிய எஸ்.கணேஷ் அவர்கள், வருவாய் நிருவாக கூடுதல் ஆணையர் முனைவர் எஸ்.நடராஜன் அவர்கள், நில அளவைத் துறையின் இயக்குநர் மரியாதைக்குரிய மதுசூதனன் ரெட்டி அவர்கள், சமூகப் பாதுகாப்புத் திட்ட ஆணையாளர் கே.வி. முரளிதரன் அவர்கள், நில சீர்திருத்தத் துறை இயக்குநர் எஸ்.சங்கர் அவர்கள் ஆகிய அத்தனைப் பேருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏழு சட்டமன்ற உறுப்பினர்கள் பேசியிருக்கிறீர்கள். அதனை நான் குறிப்பு எடுத்து வைத்திருக்கிறேன். நீங்கள் பேச, பேச Secretary அவர்களிடமிருந்து எனக்கு குறிப்பாக வந்துவிட்டது. நீங்கள் சொல்லுகின்ற காரியங்களையெல்லாம் நிச்சயமாக செய்து கொடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மொத்தம் 233 வெட்டுத் தீர்மானங்கள் வந்திருக்கின்றன. நான் முதலில் அதை படித்து பார்த்துக்கொண்டே வந்தேன். முதலில் முன்னாள் அமைச்சர் அவர்கள் பேசுவார்கள் என்று நினைத்து அவருடையதைத் தான் முதலில் எடுத்து படித்தேன். திருமங்கலத்தில் 13,000 பேருக்கு கொடுத்து விட்டோம். உங்களில் யார் பேசுவார்கள் என்று நாங்களாக ஒரு கற்பனை செய்து கொண்டோம். எங்களைப் பொறுத்தளவிற்கு, 233 வெட்டுத் தீர்மானங்களைப் படித்திருக்கிறோம். முடிந்தவரை நிச்சயமாக யாருக்கும் பாதகம் இல்லாமல் 100 சதவிகிதம் செய்து தருவோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்தையும் படித்து பார்த்துள்ளேன்.

முடிந்தவரைக்கும் என்னுடைய உரையில் அதற்குப் பதிலளித்திருக்கிறேன். ஏனையவற்றை கவனத்தில் கொண்டு, அதற்கான நடவடிக்கையினை மேற்கொள்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, வெட்டுத் தீர்மானங்களை திரும்ப பெற்றுக் கொண்டு மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**அறிவிப்புகள்!**

1. ராணிப்பேட்டை மாவட்டம்-ராணிப்பேட்டை வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம், விருதுநகர் மாவட்டம்-சிவகாசி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர் மாவட்டம்-பொள்ளாச்சி வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் ஈரோடு மாவட்டம்-பவானி வருவாய்க் வட்டாட்சியர் அலுவலகம் ஆகிய 4 பாரம்பரிய கட்டடங்கள், அதை பராமரித்து புதியதாக சீரமைப்பதற்காக ரூ.14 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

2. மதுரை மாவட்டம், மதுரை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் வட்டாட்சியர் அலுவலகம் ஆகிய 3 அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் ரூ.13.90 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

3. தஞ்சாவூர் மாவட்டம்-திருவோணம் வருவாய் வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம்-வாணாபுரம் வருவாய் வட்டம் மற்றும் திருவாரூர் மாவட்டம்-முத்துப்பேட்டை வருவாய் வட்டம் ஆகிய 3 வருவாய் வட்டங்களுக்குப் புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் ரூ.15 கோடி மதிப்பீட்டில் கட்டித் தரப்படும்.

4. 22 மாவட்டங்களில் 27 புதிய வருவாய் ஆய்வாளர் அலுவலகங்களுடன்கூடிய குடியிருப்புக் கட்டடங்கள், ரூ.9.45 கோடி மதிப்பீட்டில் கட்டித் தரப்படும்.

5. நான்கு மாவட்ட நிலஅளவை உதவி இயக்குநர் அலுவலகக் கட்டடங்களுக்கு ஒரு மண்டல துணை இயக்குநர் அலுவலகக் கட்டடம் மற்றும் நிலஅளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்ககக் கட்டடம் ஆகியவை கட்டுவதற்காக ரூ.71.90 இலட்சம் மதிப்பீட்டில் கட்டித் தரப்படும்.

6. வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரக அலுவலர்களுக்கு 2 புதிய வாகனங்கள், சார்ஆட்சியர்கள், துணை ஆட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்களுக்கு 153 புதிய வாகனங்கள் ஆக மொத்தம் 155 புதிய வாகனங்கள் ரூ.16.71 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

7. மாநிலத்தில் பேரிடர் அபாயக் குறைப்பு நடவடிக்கைகளை செம்மைப்படுத்துவதற்காக நிபுணர்கள், ஆராய்ச்சி அமைப்புகள், தன்னார்வ அமைப்புகள் மற்றும் நிருவாகத் துறைகளைக் கொண்டு ஒரு "கருத்தியல் தளம்" அமைக்கப்படும்.

8. கல்லூரிகளில் இளங்கலைப் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக பேரிடர் மேலாண்மை குறித்த பாடம் அறிமுகப்படுத்தப்படும். மேலும், பள்ளிகளில் ஏற்கெனவே உள்ள பேரிடர் மேலாண்மை பாடத்திட்டம் புதுப்பிக்கப்படும்.

9. நிலஅளவை மற்றும் நிலவரித் திட்டத் துறை அலுவலர்களுக்கு

ரூ.85.00 இலட்சம் மதிப்பீட்டில் 10 புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

10. நில ஆவணங்கள் மற்றும் கோப்புகளை பாதுகாப்பாக வைத்து பராமரிக்க,

80 வட்டாட்சியர் அலுவலகங்களின் ஆவணக் காப்பறைகளில் ரூ.8 கோடி மதிப்பீட்டில் "காம்பாக்டர்கள்" (Compactors) நிறுவப்படும்.

11. 38 மாவட்ட நிலஅளவை அலுவலகங்கள் மற்றும் நான்கு மண்டல நிலஅளவை அலுவலகங்களுக்கு, பொதுமக்களுக்கு நில ஆவணங்களை விரைவாக வழங்கும் பொருட்டு 42 ஒளிபிம்ப நகலெடுக்கும் கருவிகள் ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

12. நவீன நில அளவை கருவிகளைக் கொண்டு, நிலஅளவைப் பணி மேற்கொள்ளும் பொருட்டு, 6 மாவட்டங்களில் பணிபுரியும் 454 நிலஅளவைப் பணியாளர்களுக்கு ரூ.27.24 கோடி மதிப்பீட்டில் வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவி கள் (DGPS Rovers) வழங்கப்படும்.

13. இணைய வழி பட்டா மாறுதல் திட்டத்தினை விரைவாகவும், சிறப்பாகவும் செயல்படுத்தும் பொருட்டு, நிலஅளவை மற்றும் நிலவரித் திட்ட துறையில் பணிபுரியும் 3,078 நிலஅளவைப் பணியாளர்களுக்கு ரூ.15.60 கோடி மதிப்பீட்டில் தரவு அட்டைகளுடன் கூடிய மடிக்கணினிகள் வழங்கப்படும்.

14. மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் அதிகரித்து வரும் மக்கள் தொகையைக் கருத்தில் கொண்டும், அரசின் நலத்திட்டங்கள் மக்களை விரைவாகச் சென்றடைவதற்கும் சென்னை, செங்கல்பட்டு, சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, திருவள்ளூர், காஞ்சிபுரம், தூத்துக்குடி, திருவண்ணாமலை, ஈரோடு, திருப்பத்தூர், திண்டுக்கல், கடலூர், தஞ்சாவூர், திருப்பூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 17 மாவட்டங்களில் 50 புதிய வருவாய் குறுவட்டங்கள் உருவாக்கப்படும்.

15. பொதுமக்களுக்கு வருவாய்த் துறையின் சேவைகளை விரைவாக வழங்கும் பொருட்டு, செங்கல்பட்டு, சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திண்டுக்கல் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 8 மாவட்டங்களில் மொத்தம் 25 புதிய வருவாய் கிராமங்கள் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

16. வட்ட அளவில் வருவாய்த் துறையின் நிருவாகத்தை வலுப்படுத்தி பொதுமக்களுக்கு வருவாய்த் துறையின் சேவைகளை விரைவாக வழங்கும்பொருட்டு 26 துணை வட்டாட்சியர் பணியிடங்கள் புதியதாக தோற்றுவிக்கப்படும்.

17. கலைஞர் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் வீட்டு மனை இல்லாத தகுதிவாய்ந்த பயனாளிகளுக்கு பூமிதான நிலங்களில் இலவச வீட்டுமனை விநியோகப் பத்திரம் வழங்கப்படும்.

18. மனைவரி விதிக்கப்பட்ட இடங்களில் வருவாய் பின்தொடர் பணிகளை மேற்கொண்டு 10,000 குடும்பங்களுக்கு பட்டாக்கள் வழங்கப்படும்.

19. கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டத்தில், ஆறு வருவாய் கிராமங்களில் உள்ள 31,117 பயனாளிகளுக்கு நிலவரித் திட்டப் பணிகளை மேற்கொண்டு பட்டாக்கள் வழங்க ரூ.84.47 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

கலைஞர் கனவு இல்லம் கட்டுவதற்கு இடம் கிடைப்பதில்லை. ஆனால், அதற்கு application நிறைய கொடுக்கிறார்கள். அவர்களுக்கு இடமில்லாமல் இருக்கிறது. அதற்கு என்ன செய்திருக்கிறோம் என்றால், கலைஞர் கனவு இல்லத் திட்டத்தின்கீழ் வீட்டு மனை இல்லாத சூழ்நிலையில், தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு அந்தப் பகுதியில் பூமிதான இயக்கத்தில் நிலம் இருக்குமென்று சொன்னால், அதிலே அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்து பட்டா வழங்குவதற்கான பணியினை மேற்கொண்டு வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

முடிந்த அளவிற்கு என்னென்ன நல்ல காரியங்களைச் செய்ய முடியுமோ அந்தளவிற்கு இந்தத் துறையின் மூலமாக நாங்கள் செய்திருக்கிறோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, துறை சார்ந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரும்படி நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன் பதிலுரை வழங்கினார்.